தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 2, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.”

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

பகுதிநேர நியாய விலைக் கடை

***36149—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜூலை 2

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகராசி வழிவந்த முகராசிக்காரர், மமதை என்பதே இல்லாத மழலைச் சிரிப்புக்காரர், கருணைத் தாய் வழி நடக்கும் கைராசிக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) கடலளவே துயரானாலும், கடும் உழைப்பு என்னும் துடுப்பால் கரை சேர்க்கும் காரிய சித்தர், ஏகடியம், எகத்தாளம் எல்லாவற்றையும் ஏணிப்படியாக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. இ.பி.எஸ். அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எளிமைக்கே இலக்கணமாக, வலிமையால் வாகைகள் குவிக்கும், வெற்றி ஒன்றே குறியாகக் கொண்டு விடாப்பிடியாகக் கரம் கொடுத்து துணை நின்று உழைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லோர் அமர்ந்த நற்றமிழ் பூமியின் சட்டமன்றப் பெருமைகளை கண்ணின் இமையாய் காத்து வரும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் எனது வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், நெடியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கரிம்பேடு ஆதி திராவிடர் காலனி பகுதியைச் சேர்ந்த 152 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 610 குடும்ப அட்டைகளுடன் கரிம்பேடு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும்பட்சத்தில் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை. எனினும், கரிம்பேடு ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆராதனைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம்

2019 ஜூலை 2]

புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு நியாய விலைக் கடை என சுமார் 17,536 கடைகளை உருவாக்கி சாதனை படைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அது தற்போது அம்மா அரசில் 32,924 என உயர்ந்திருக்கிறது. அதே வழியில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசியை இலவசமாகத் தந்து, சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற திட்டங்களை அம்மா அரசில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் தமிழ்நாட்டில் நிறைவேற்றி வருகிறார்கள். இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற கூட்டுறவுக் கடைகள் முக்கிய பங்காற்றுகின்றன. நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில், கரிம்பேடு ஆதி திராவிடர் காலனி மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கவேண்டுமானால், 2 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இடையே நெடுஞ்சாலை, ஆறு, குளம் ஆகியவை வருகின்றன. இக்கிராமத்தில் போதுமான குடும்ப அட்டைகள் உள்ளன. அனைத்துத் தகுதிகளும் உள்ளன. ஆதி திராவிடர் காலனி என்பதால், சிறப்பு நேர்வாகக் கருதி, கரிம்பேடு ஆதி திராவிடர் காலனியில் பகுதிநேர கூட்டுறவு நியாய விலைக் கடையை அம்மா அவர்களுடைய அரசு விரைவாக அமைத்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உடனடியாக அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி, பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மனிதப் புனிதவதி, இறந்தும் இறைவனாய் இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில்தான், 2011 ஆம் ஆண்டு முதல் 31–5–2019 வரை தமிழ்நாடு முழுவதும் 673 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1,722 பகுதிநேர நியாய விலைக் கடைகள் என மொத்தம் 2,395 நியாய விலைக் கடைகள் அந்தப் பகுதி

மக்களுடைய தேவைக்காகவும், இம்மாமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கவும் இதுவரை திறக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த நகரின் நெடுஞ்சாலைப் பகுதியை மக்கள் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், உடனடியாக பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதைக் கருத்தில்கொண்டு, துறை ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அனுமதியைப் பெற்று, அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான பதிலைத் தந்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்கள் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், திருவள்ளூர் மாவட்டத்திற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கும் ஒரே ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியே உள்ளது. திருவள்ளூர் மாவட்டம் தொடங்கி 20 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் 122 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 21 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகளும், 10 நில வள வங்கிகளும், 2 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 1 நகர கூட்டுறவு வங்கி, 56 கூட்டுறவுப் பணியாளர்கள் சங்கங்கள், 1 கூட்டுறவு அச்சகம், 100–க்கும் மேற்பட்ட கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் என பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் புரட்சித் திட்டங்களும், புதுமையான திட்டங்களும் உருவாக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அம்மா அவர்களின் அரசு, திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு புதிய மத்தியக் கூட்டுறவு வங்கியைத் தொடங்குமா என அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நரசிம்மன் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இக்கேள்வி கூட்டுறவுத் துறையைச் சார்ந்திருப்பதனால், முக்கியத்துவம் கருதி, இதற்கான விடையை அளிக்கிறேன். இந்திய அரசில், ஒரு மாவட்ட வங்கியைப் பிரிக்க வேண்டுமென்றால் ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற வேண்டும். ரிசர்வ் வங்கி என்ன சொல்லியிருக்கிறதென்றால், மாவட்ட வங்கிகளைப் பிரிக்கக் கூடாது, பொதுவாக, சங்கங்களை இணைத்து ஒன்றாக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. எங்கேயும் அனுமதி கொடுப்பதில்லை. தமிழகத்தில் இன்றைக்கு 32 மாவட்டங்கள் இருந்தாலும்கூட, 23 மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மட்டுமே இருக்கின்றன. இதனால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. மக்களுக்கான சேவைகள் தங்குதடையின்றி கிடைக்கின்றன. நம்முடைய கூட்டுறவுத் துறையானது இந்தியாவிற்கே முன்னோடியாக, அனைத்து வகைகளிலும் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட கூட்டுறவு வங்கிகள் அனைத்துமே Core Banking Solutions–க்கு வந்திருக்கின்றன.

ஆக, மக்களுக்காகப் பணியாற்றுகின்ற ஒரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, வேறோர் மாவட்டத்தில் வைக்க வேண்டுமென்ற நிலை இதுவரை எழவில்லை. கணினியுகம், அறிவியல் புரட்சி நடந்துகொண்டிருக்கின்ற இன்றைய சூழ்நிலையில், உட்கார்ந்த இடத்திலிருந்தே அனைத்து நிலைகளிலும், அனைத்துப் பணிகளையும் பார்த்துக்கொள்ள முடியும். சட்டமன்றத்தில் நான் சார்ந்திருக்கின்ற துறை சார்பான மானியக் கோரிக்கை நாளைய தினம் வரவிருக்கிறது. அதில், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை எவ்வாறெல்லாம் சாதனை புரிந்திருக்கிறது என்பதை உங்களுக்கு விரிவாக, தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையானது, நாம் மட்டும் நினைத்தால் முடியாது. ரிசர்வ் வங்கியினுடைய உரிமையைப் பெற்றால்தான் அந்த வங்கியைப் பிரிக்க முடியும் என்ற சூழ்நிலையில், அது இயலாத ஒரு சூழ்நிலை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 2

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் ஒன்றியம், சிறுகுடி ஊராட்சி, தேத்தாம்பட்டியில் பகுதிநேர கடையையும், முளையூர் ஊராட்சி, ராவுத்தம்பட்டியில் பகுதிநேர கடையையும், கனவாய்பட்டி ஊராட்சி, கொரசனபட்டியிலே ஒரு பகுதிநேர கடையையும் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் இங்கே மூன்று பகுதிநேர கடைகளைத் திறக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தபிறகு ஏறத்தாழ 2,395 கடைகள் தமிழகத்திலே புதிதாகத் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அந்தந்தப் பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கவேண்டும். குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் மக்களுக்கு சிரமம் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977—லே ஆட்சிக்கு வருகிறார். 1978 ஆம் ஆண்டு வரைக்கும் 4,441 கடைகள் மட்டுமே இருந்தன. அத்தியாவசியப் பொருட்களை ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கும் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் கிராமத்திற்கு ஒரு கடை என்று கொண்டுவந்து, கார்டுகளின் எண்ணிக்கையை கருதாமல், படிப்படியாக அவர்களுடைய காலத்திலே 15,501 கடைகள் என்று உயர்த்தி ஆணை வழங்கப்பட்டது. அதன்பிறகு உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் பல்வேறு காலகட்டங்களில் படிப்படியாக உயர்ந்து தற்போது கூட்டுறவுத் துறையில் மொத்தம் 32,931 கடைகள் இருக்கின்றன. கருணையின் பிறப்பிடமாக, ஏழையின் ஏந்தலாக, பசியில்லாத தமிழகத்தை உருவாக்குவதற்கு இரவு பகலாகப் பாடுபட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2019 ஜூலை 2]

அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் யாரும் பசி என்பதையே அறியக்கூடாது என்ற அடிப்படையில் விலையில்லா அரிசியை வழங்கியதோடு, 46 நகரும் நியாய விலைக் கடைகளை உருவாக்கினார்கள். அதோடு கிராமப்புறங்கள், மலைப் பிரதேசங்கள், எளிதில் அணுக முடியாத கிராமங்களில் 65, 67, கி.மீ. தொலைவில் உள்ள குக்கிராமங்களில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கும் இதுபோன்று அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நகரும் கடைகளைக் கொண்டு வந்தார்கள். பகுதிநேர கடைகள், முழுநேர கடைகளைத் திறக்க கூட்டுறவுத் துறையில் சட்ட விதிகள் ஒரு பக்கம் இருந்தாலும்கூட, 500, 150 கார்டுகள், அதேபோன்று, மலைப்பிரதேசமாக இருந்தால் 400 கார்டுகள், 100 கார்டுகள் இருக்க வேண்டுமென்ற நிலை இருந்தாலும்கூட, அதையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் அந்தந்தப் பகுதி மக்களுடைய தேவை மற்றும் அந்த மக்களுக்கு இருக்கும் சிரமங்களையும் கருத்தில்கொண்டு, இன்றைக்கு கூட்டுறவுத் துறையின் சார்பாகக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. அதற்கு உணவுத் துறையும் உதவிபுரிகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் குறிப்பிட்ட மூன்று பகுதிகளும் சட்டவிதிகளுக்குட்பட்டிருந்தால், அங்கு பகுதிநேர கடைகள் திறக்கப்படும். இல்லாவிட்டால் துறை ரீதியாக ஆய்வு செய்து, நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கடையநல்லூர் நகராட்சி எல்லையிலே திரிகூடபுரத்திலே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டுமென்ற கோரிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாக வைக்கப்பட்டு, அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து ஆய்வு செய்து, அதற்குத் தகுதியான இடத்தையும் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய முஸ்லிம் ஜமாத் சார்பாக வழங்குவதாகவும்*

சொல்லி, அனைத்து பணிகளும் முடிந்த நிலையிலே, சென்ற வருடம் திறக்கப்படும் என 29–6–2018 அன்று அதிகாரிகளும் தெரிவித்துச் சென்று, இன்று ஒரு வருடம் ஆகிவிட்டது. இன்னும் அந்த திரிகூடபுரம் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் எல்லாம் அந்தக் கடையைத் திறப்பதற்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, அங்கு நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் அரசுரீதியாக ஏதாவது தேக்கம் இருந்தால், அதைப் பரிசீலித்து, எதனால் அதைத் திறக்கவில்லை என்பதை உடனடியாகக் கேட்டு, விரைவாக அந்தக் கடையைத் திறப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தக் காலதாமதம் எதனால் வந்தது என்பதை ஆராய்ந்து, எந்தவிதமான சிரமம் இருந்தாலும் அதை மாற்றி, நிச்சயமாக வேறு ஏற்பாடு ஏதேனும் செய்து அந்தப் பகுதியிலே கடையைத் திறப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

மின்மாற்றி

***32460—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—